# தாய் தந்தையே முதல் தெய்வங்கள்





அருளியது
ஞானகுரு வேணுகோபால சுவாமிகள்

# 1 “தாயின் காக்கும் உணர்வு” பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்




நம் தாய் தந்தையர் நல்ல நிலைக்கு வர வேண்டும் என்ற எண்ணத்தில் பிள்ளைகளை வளர்த்து வருகின்றார்கள்.

ஆனால் பிள்ளைகள் அம்மா அப்பாவிடம் சண்டைக்கு வந்துவிட்டால் போதும். பையன் என்ன செய்கின்றான்? கோவித்துக் கொண்டு சென்று விடுவான்.

சென்ற பின் உங்கள் அம்மா கீழே விழுந்துவிட்டார்கள். அடிபட்டுக் காயமாகிவிட்டது என்று கேள்விப்படுவான். அதைக் கேட்டுவிட்டு பையன் என்ன சொல்வான்?

“அப்படித்தான் வேண்டும்..,” என்பான்.

அதே சமயத்தில், பையன் அம்மாவை அடித்து உதைத்திருக்கட்டும். அதன் பின் பையன் வெளியிலே செல்லும் போது அவனை அறியாமல் தவறிக் கீழே விழுந்திருக்கட்டும்.

அதைத் தாய் கேள்விப்பட்டவுடன் “அடப் பாவி மகனே என்னை இப்பொழுது தானடா அடித்தாய்.., அதற்குள்ளே கீழே விழுந்துவிட்டாயே..,” என்று வேதனைப்படும்.

எழுந்திருக்க முடியவில்லை என்றாலும் கூட பையனைப் பார்க்க வேண்டும் என்று எழுந்து ஓடி வரும்.

அப்பொழுது தாயின் பாசம் எப்படி இருக்கும்? இயற்கையின் உண்மையின் உணர்வுகள் இது. ஆனால், தாயை நாம் எத்தனை பேர் மதிக்கின்றோம்? நன்றாக யோசனை செய்து பாருங்கள்.

நம்மை மனிதனாக உருவாக்கியது யார்? தாய். தெய்வமாக நம்மைக் காப்பாற்றியது யார்? தாய். நல்ல மொழிகளை நமக்குச் சொல்லிக் கொடுத்த முதல் குரு நம் தாய் தான்.

தாயை முதலில் நாம் மதித்துப் பழக வேண்டும்.

இந்தச் சாமியார், அந்தச் சாமியார் என்று சொல்கிறார்கள் அல்லவா, எந்தச் சாமியாரும் வேண்டியதில்லை.

நீங்கள் உங்கள் தாயை மட்டும் காலையில் பாத நமஸ்காரம் செய்து உங்கள் அருளாசி வேண்டும் எனக்கு நல்லது நடக்க வேண்டும் என்று ஆசீர்வாதம் வாங்கிப் பாருங்கள்.

காட்டுக்குள் சென்றால் புலியோ யானையோ மற்றதோ தாக்க வரட்டும். நீங்கள் “அம்மா..மா..மா” என்று மட்டும் சொல்லிப் பாருங்கள். புலி வந்து தாக்குமா? யானை வந்து தாக்குமா?

நான் உங்களிடம் பந்தயம் கட்டுகின்றேன். “தாக்காது”.

தாயின் உணர்வு உங்களுக்குள் பதிவாகி இருக்கின்றது. இந்தக் காற்று மண்டலத்திலும் பரவி இருக்கின்றது. நீங்கள் “அம்மா..மா..மா” என்று எண்ணும் போது அந்த அலைகள் வந்து உங்களைக் காக்கும்.

தாக்க வரும் மிருகங்களும் விலகிச் செல்லும்.

உதாரணமாக, ஒரு இடத்தில் நின்று இங்கே இந்த மரத்தின் அடியில் ஒருவன் “ஆ..,” என்று பயந்துவிட்டான் இங்கே “பேய்.. வந்தது...,” என்று சொன்னால் போதும்.

மற்றவர்கள் அதே மரத்துக்கு அடியில் போகும்போது “நேற்று இங்கே ஒரு பேய் வந்தது..,” என்று பதிவாக்குவார்கள். உடனே என்ன ஆகும்?

அந்த மரத்தைக் கண்ணில் பார்த்ததுமே “இங்கே தான்..,” அந்தப் பேய் வந்தது என்று சொன்னால் நமக்குள் அந்தப் பதிவின் உணர்வை நுகர்ந்தவுடன் “கிடு.., கிடு..,” என்று நடுங்குகின்றது.

நடுக்கம் வருகின்றதா இல்லையா..,? பதிவான உணர்வின் அலைகள் நம்மை இயக்குகின்றதா இல்லையா?

அதைப் போன்று தான், தாய் எப்பொழுதுமே தன் பிள்ளைகள் அவர்கள் உயர்ந்தவர்களாக வேண்டும், நல்லவர்களாக வேண்டும் இதையே தாய் தனக்குள் சதா வளர்த்து வைத்துக் கொண்டுள்ளது. அந்த உணர்வலைகள் நமக்கு முன் உண்டு.

ஆக, நாம் குறும்புத்தனம் செய்தால் திட்டாமலா இருப்பார்கள். இது சாதாரண வாழ்க்கையில் வந்தது.

எது எப்படி இருந்தாலும் தாய் பட்டினியாக இருந்தாலும் தன் பிள்ளைக்குக் கொடுக்க வேண்டும் என்று உணவைக் கொடுக்கத்தான் செய்யும்.

தனக்கு வயிற்றுக்கு இல்லை என்றாலும் தன் குழந்தைகளைக் காப்பதற்குத் தாய் எத்தனையோ சிரமப்பட்டுக் கொடுக்கின்றது. ஆனால், அந்தத் தாயை நாம் மதிக்கின்றோமா?

ஆகவே, நாம் எப்படி இருக்க வேண்டும்?

எந்தக் கோவிலுக்குச் சென்றாலும் என் தாய்க்கு அந்த அருள் சக்தி கிடைக்க வேண்டும். எனக்காகப்பட்ட கஷ்டங்கள் எல்லாம் நீங்க

வேண்டும். என் தாய் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று எண்ணுதல் வேண்டும்.

அவர்களின் அருள் துணை எப்பொழுதுமே எனக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். என்று நீங்கள் எண்ணிப் பாருங்கள்.

உங்களுக்கு ஒரு பெரிய சிரமமே வருகின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். தொழிலில் எவ்வளவோ கஷ்டம் வருகின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அந்த நேரத்தில் யாம் சொன்ன முறைப்படித் தாயை எண்ணித் தியானியுங்கள். “தாயின் காக்கும் உணர்வு” வந்து உங்களுக்குச் சிந்தனை வரும். உங்களுக்கு நல்ல வழி காட்டும்.

உங்கள் அனுபவத்தில் தெரிந்து கொள்ளலாம்.

<u>2 “தாய் கருவிலிருக்கும்போது எடுத்துக் கொண்ட உணர்வே” நம்மை நல்லவராக்குவதும் கெட்டவராக்குவதும்</u>




மனிதனாக உருப்பெறக் காரணமாக இருந்த நம் தாய் தந்தையரை முதலில் கடவுளாக மதித்து பழகுதல் வேண்டும்.

ஏனென்றால் அவர்கள் எத்தனையோ தொல்லைகள் பட்டுத்தான் அவர்கள் மனிதனாக ஆனார்கள்.

ஆனால், நாம் ஈயாக எறும்பாக பாம்பாக தேளாக இருந்திருப்போம். அதை அடித்திருப்பார்கள்.

நம் உயிர் அவர் உடலின் ஈர்ப்பிற்குள் சென்றிருக்கும். அவர் உடலில் சேர்த்த உணர்வைக் கவர்ந்தது நம் உயிர். நம் உயிர் அவர் உடலுக்குள் சென்று அவர் வளர்த்துக்கொண்ட உணர்வின் தன்மை கவர்ந்தது.

கவர்ந்து வளர்ந்து அவருடைய கருவாக நாம் உருவானாலும் அவர் கருவில் இருக்கக்கூடிய காலத்தில் அவர்கள் நல்லதைப் பற்றி ஏங்கி இருந்தால் நல்ல உணர்வுகள் சேர்த்து நல்ல உடலை உருவாக்கும்.

ஆனால், நாம் கருவிலே இருக்கப்படும்போது வேதனையும் துயரமும் அதிகமாக அந்த உணர்வின் தன்மைகளைத் தாய் எடுத்திருந்தால் நம் உடலில் பல நோய்களும் ஊனமான உடலும் உருவாக்கும் தன்மை வருகின்றது.

ஆக, நம்முடைய சந்தர்ப்பம் கருவில் இருக்கும்போது தாய் எடுத்துக்கொண்ட உணர்வுக்குத்தக்கத்தான் நம்மை நல்ல மனிதனாக உருவாக்கியது. சிந்தித்துச் செயல்படும் சந்தர்ப்பத்தையும் உருவாக்கிக் கொடுத்தது.

நாம் கருவில் இருக்கும்போது தாய் எடுத்த உணர்வால்தான் நாம் நல்லவராகவும் சிந்திக்கும் தன்மையும் இப்பொழுது இதைப் போன்ற நல்ல உபதேசங்களைக் கேட்கும் அருளும் நமக்குள் வலுக்கொடுத்தது.

எந்தத் தாய் அவ்வாறு எடுத்ததோ, அப்படிப்பட்ட தாய் உடலில் வளர்ந்த உணர்வு கொண்டவர்கள் இருப்பின் அவர்கள் தான் இந்த உபதேசத்தைக் கேட்பார்கள், கூர்ந்து கவனித்து எடுத்துக் கொள்வார்கள்.

அந்த உணர்வின் தன்மை இருந்தால் தான் இதைக் கவர முடியும்.

அப்படிப்பட்ட உணர்வுகள் (தாய் கருவில் பெற்ற நிலைகள்) இல்லை என்றால் கேட்பார்கள், படிப்பார்கள். தனக்கு வேண்டியதை எதிர்ப்பார்ப்பார்கள். அது இல்லை யென்றால் போய்க்கொண்டே இருப்பார்கள்.

அந்த நல்ல உணர்வுகள் பெற வேண்டுமென்று உணர்வின் தன்மை அன்று தாய்க்கருவில் பெற்ற நிலை தான் இன்று உங்களை இங்கு அமர்ந்து கேட்கும்படி கூர்ந்து கவனிக்கும்படிச் செய்கின்றது.

ஆகவே, எத்தனை தொல்லைகள் இருப்பினும் எத்தனை துயரங்கள் இருப்பினும் மெய் உணர்வை நீங்கள் பெறும் தகுதி ஏற்படுத்தியது உங்கள் தாயே.

அதனால் அந்தத் தாயை நீங்கள் கடவுளாகவும் தெய்வமாகவும் மதித்துப் பழகுதல் வேண்டும்.

எத்தனை இன்னல் வந்தாலும் ஒவ்வொரு நொடியிலேயும் நம்மை எத்தனையோ வகையில் காத்தருளிய தெய்வம் நம் தாய் தான். நமக்கு நல்ல வழி காட்டிய குருவும் தாயே. நாம் ஒவ்வொருவரும் தாயை மதித்து நடந்து பழக வேண்டும்.

ஏனென்றால் தாய் கருவில் இருக்கும்போது எடுத்துக்கொண்ட உணர்வே நம்மை நல்லவனாக்குவதும் கெட்டவனாக்குவதும்.

ஆகையினால் நாம் நமது உயிரைக் கடவுளாக மதித்து நம் தாய் தந்தையரின் உயிரைக் கடவுளாக மதித்து அவர்களை தெய்வமாக மதித்து இந்த வாழ்க்கைப் பயணத்தை நீங்கள் செயல்படுத்துங்கள்.

நமது குரு காட்டிய அருள் வழியில் உங்களுக்குள் ஆழப் பதிவு செய்ததை நினைவுக்குக் கொண்டு வந்தால் உங்கள் வாழ்க்கையில் அந்த அருள் சக்திகளைப் பெறலாம்.

உங்களுக்குள் அறியாது வரும் இருளைப் போக்கலாம். தெளிந்த மனம் பெறலாம். தெளிவான வாழ்க்கை வாழலாம்.

# 3 மெய்ஞானத்தின் தத்துவத்தை நீ பெறுவதற்கே மூலம் உன் தாய் தான் என்றார் குருநாதர்




நம் அன்னை தந்தைதான் நம்மை முதலிலே மனிதனாக உருவாக்கி நமக்கு அறிவையும் தெளிவையும் ஊட்டினார்கள். நமக்குக் குருவாக இருந்து இயக்கிக் கொண்டு இருப்பதும் நம் அன்னை தந்தையே.

அன்னையின் உயிரே மெய்ப்பொருளாகி அதனின் வாழ்க்கையில் கண்டுணர்ந்து மனிதனாக உருவாக்கியது. மனித நிலைகள் தனக்குள் தன் இனம் தழைக்க வேண்டுமென்று ஏக்க உணர்வின் உண்மைப் பொருளை உணர்த்தி அதன் வழிகளில் நம்மை மனிதனாக உருவாக்கியுள்ளது தாயின் உயிர்.

நமது தாய் தந்தை உயிர் கடவுளாக இருப்பதால் அதனின் உணர்வால் அறிந்துணர்ந்த உணர்வின் தன்மை கொண்டு தன் இனம் தன் மக்கள் என்று அதனின் உயிரே அறிவுறுத்தப்பட்டு நம்மைக் காத்தருளி நல்வழி காட்டி நல் உணர்வுகளைப் புகட்டியது தாய் தந்தை உயிர் கடவுள்.

நமது வாழ்க்கையை உயர்த்துவதற்கும், மகிழ்ந்திடவும், மனிதன் என்ற உண்மையை உணர்த்துவதற்கும் நமது தாய் தந்தையின் உயிரே கடவுளாக நின்று தெய்வமாக நின்று நல் வழி புகட்டிய குரு முதல் குருவும் தாயே. நம்மைக் காத்த முதல் தெய்வமும் தாயே.

இதை நமது சாஸ்திரங்கள் தெளிவாக எடுத்துரைக்கின்றது. இதை நாம் தெரிந்து தெளிந்து இந்த நிலையை நாம் அறிந்து கொள்வதே நலம்.

எனது (ஞானகுரு) அன்னை தந்தை என்னை மனிதனாக உருவாக்கினார்கள். அதன் வழியில் பேரண்டத்தின் உணர்வின் தன்மையை

அறியும் தன்மையாக நமது குருநாதர் மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர் பேரண்டத்தின் உணர்வின் உண்மையை உணர்த்தவும் செய்தார்.

என் அன்னை தந்தையின் பூர்வத்தில் அவர்கள் எண்ணிய ஏங்கிய ஏக்கத்தின் உணர்வில்தான் கருவிலேயே இந்த உணர்வின் தன்மையை என் அன்னை தந்தையர் என்னிலே பதியச் செய்துள்ளது.

அந்தப் பூர்வத்தில் அமையவில்லை என்றால் பேரண்டத்தின் உண்மையை உணரும் தன்மையை நான் இப்பொழுது பேச முடியாது.

என் அன்னை தந்தை சிரமத்தின் எல்லை கடந்த நிலையில் இருக்கும் பொழுது என் தாய் ஞானிகளையும் மகரிஷிகளையும் எண்ணி ஏங்கியது.

அறியாத இருள் நீங்கிட வேண்டும் என்றும், வாழ்க்கையில் மகிழ்ந்திட வேண்டும் என்றும், பொருள் கண்டுணர வேண்டும் என்ற உணர்வினை உந்தியது. உணர்வின் ஏக்கத்தை என் தாய் பெற்றது என்று குருநாதர் உணர்த்தினார்.

காரணம் எனது தந்தையின் தாய் என் தாய் மேல் பற்றற்று இருந்தது. அதை தினமும் நிந்தித்துக் கொண்டேயிருந்தது.

மேலும் என் தந்தை மாற்றுத் தாரம் செய்து கொள்ள வேண்டும் என்று சொந்தத்தில் அது இயக்கப்பட வேண்டும் என்ற நிலையில் என் தந்தையின் தாய் என் தாய்க்குக் கடும் கொடுமைகளை உருவாக்கியது.

அந்த நிலையில்தான் என் தாய் தன் மூதாதையர்களை எண்ணியது. எங்கள் மூதாதையர்கள் பலர் ஞானத்தின் தத்துவத்தில் அவர்கள் வளர்ந்து வந்தவர்கள்.

என் தாய் அவர்களை எண்ணி அதன் வழிகளில் பேரின்பத்தைக் காட்டும் பெருநிலை கொண்ட மகரிஷிகளை எண்ணி அந்த அருளைத் தான் பெறவேண்டும் தன் குடும்பம் பெறவேண்டும் என்று எண்ணி ஏங்கியது.

என் தாய் இவ்வாறு எண்ணி ஏங்கியதைப் பிற்காலத்தில் குரு எனக்கு உபதேசித்தார், உணர்த்தினார். நீ இந்தத் தத்துவம் பெறுவதற்கே மூலம் உன் தாய் என்று உணர்த்தினார் மாமகரிஷி ஈஸ்வராய குருதேவர்.

ஏனென்றால், அக்காலங்களில் மாமியாருக்கு அடிபணிந்தே நடக்க வேண்டும். இல்லையென்றால் அதற்குப் பல தீமைகளும் விளைந்து கொண்டேயிருக்கும்.

இத்தகைய சூழ்நிலையில் உன் தாய் அது எண்ணத்தின் ஏக்கத்தால் அது பெற்ற அந்த உணர்வின் தன்மை தாய் கருவில் நீ இருக்கும் பொழுது தாய்க்குள் பதிவான அந்தப் பதிவின் உணர்வே உன்னில் இயங்கத் தொடங்கிவிட்டது.

அதுவே உன்னை நான் நாடி வந்ததற்கும் மூலமும் அது தான் என்று நமது குருநாதர் எனக்கு உணர்த்தினார்.

உனது தாயின் உயிர் கடவுள். உன்னைக் காத்தருளிய தாயின் அந்த உணர்வே தெய்வம். நீ இன்று மனிதனாக இருப்பதற்கு நல் வழி காட்டிய அதுவே குரு என்று குருநாதர் அதை உணர்த்தினார்.

இதைப் போன்ற பல பல உண்மையின் நிலைகளை குரு உணர்த்தி அன்னை யார் என்பதைத் தெளிவாக்கினார். மனிதனாக இருப்போர் நாம் அனைவருமே இந்தச் சாஸ்திரத்தின் உண்மை நிலைகளைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதே நலம்.

# 4 மூன்றாவது வகுப்புப் படித்த என்னால் மெய்ஞானத்தை எப்படிப் பெற முடிந்தது?




தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி என்று நாம் எல்லோரும் பாடிக் கொண்டிருக்கின்றோம்.

தென்னாட்டிலே தோன்றிய அந்த அகஸ்தியன்தான் அணுவின் இயக்க ஆற்றலை அறிந்தவன். அணுவிற்குள் மறைந்துள்ள நிலைகளை உயிரின் இயக்கத்தால் உணர்ந்து இந்த உணர்வால் உணர்வின் தன்மை எப்படி இயக்குகின்றது என்று கண்டறிந்தவன் அகஸ்தியன்.

ஆகவே, அவன் கண்டுணர்ந்த உணர்வின் தன்மை உலகெங்கிலும் பரவிப் படர்ந்துள்ளது. எவரொருவர் அவரைப் பின்பற்றுகின்றனரோ அதே ஒளியின் சிகரமாக அந்த சிவமாக முடியும்.

அதைத்தான் தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி என்று சொல்வது.

தென்னாட்டிலே தோன்றியவன் மனித உடலின் இச்சையை மறைத்து உயிருடன் ஒன்றி ஒளியின் தன்மை அவனுக்குள் எடுத்து அந்த உணர்வின் தன்மையைத் தனக்குள் இரையாக்கி இன்றும் அவன் ஒளியின் சரீரமாக துருவ நட்சத்திரமாக இருக்கின்றான்.

அந்தத் துருவ நட்சத்திரத்திலிருந்து வரும் பேரருள் பேரொளியை நாம் நுகர்ந்தால் அவன் அடைந்த நிலைகளை நமக்குள் இரையாக்கி அந்த இரையின் உணர்வின் செயலாக உயிருடன் ஒன்றி ஒளியின் சரீரமாக நாமும் நிலைத்திருக்க முடியும்.

என் தாய் பல கொடுமைகளில் சிக்கியிருக்கும் பொழுது அதன் கருவிலே நான் இருக்கப்படும் பொழுது தவித்துக் கொண்டிருந்தது.

அதிலிருந்து எப்படியும் தான் காக்கப்படவேண்டும் என்ற நிலையில் பல தத்துவ ஞானிகளை எண்ணி ஏங்கியது.

என் தாயின் ஏக்கத்தில் அந்த அருள் ஞானிகளின் உணர்வுகள் பதிவானது. அந்தப் பதிவின் நிலைகள் கொண்டு தான் இந்த மெய் ஞானத்தை இன்று நான் வெளிப்படுத்த முடிந்தது.

மூன்றாவது வகுப்பே நான் படித்தாலும் இந்தத் தத்துவத்தைப் பேசுகின்றேன் என்றால் அருள் மகரிஷிகளின் உணர்வுகள் விளைந்து அதன் வழிகளிலே தான் நானும் அருள் ஞானத்தைப் பெறமுடிந்தது.

நீங்கள் எல்லோரும் பெறும் நிலைகளுக்கு அந்த அருள்ஞானத்தை உபதேசிக்கும் பொழுது என்னுள்ளும் அது வளர்கின்றது.

இதைப் போலத்தான் எதிர்காலத்தில் நாம் நமது நாட்டையும் நம்மையும் நம் ஊரையும் காக்கப்படவேண்டும் என்றால் அந்த ஞானிகள் காட்டிய சாஸ்திர வழிகளில் திருமணம் ஆகும் தம்பதிகளுக்கும், அவர்கள் கருவில் உருவாகும் குழந்தைகளுக்கும் அந்த அகஸ்தியனின் ஆற்றலைப் பெறச் செய்ய வேண்டும்.

அகஸ்தியனைப் பிண்பற்றியவர்கள் வசிஷ்டரும் அருந்ததி போல இன்று அந்தச் சப்தரிஷி மண்டலங்களில் இணைந்தே வாழ்ந்து வளர்ந்து கொண்டுள்ளார்கள்.

ஏனென்றால், இன்றைய நிலைகள் தாவர இனங்களாக இருந்தாலும் ஆண் மரம் பெண் மரம் என்று இருக்கும்.

ஆண் மரம் உமிழ்த்தும் உணர்வின் தன்மையைப் பெண் மரம் கவர்ந்தால் அதன் உணர்வின் தன்மை பலன் தருகின்றது.

இதைப் போன்று பெண் மரங்கள் உமிழ்த்தும் நிலைகளை ஆண் மரங்களும் கவர்ந்தால் அதனுடைய பலன்களும் அதனுடைய தன்மைக்குத்தக்க மாறுகின்றது.

நெகடிவ், பாசிடிவ் என்ற உணர்வின் தன்மை மோதும் பொழுது தான் பூமியின் சுழற்சியின் தன்மையும் இருக்கின்றது.

ஒரு உணர்வின் தன்மை நல்ல குணம் கொண்டு இருப்பினும் இன்னொருவர் தீமையின் நிலைகளில் வரப்படும் பொழுதுதான் எதிர் மோதலில் தீமை என்ற நிலையை அறிய முடிகின்றது.

தீமைகளிலிருந்து விடுபடும் நிலைகளும் உருவாகின்றது.

எதிர்நிலை இல்லை என்றால் உலக சுழற்சியும் இல்லை. விஷத்தின் தன்மை தாக்குதல் இல்லை என்றால் சூரியனின் சுழற்சியின் தன்மையும் இல்லை.

சூரியனின் சுழற்சியின் தன்மை வேகம் அடையவில்லை என்றால் நஞ்சின் தன்மையைப் பிரிக்கும் தன்மை இல்லை. ஆகவே, உணர்வின் வேகத்தை நமக்குள் கூட்டி நமக்குள் வரும் நஞ்சினை நீக்க அருள் மகரிஷிகளின் உணர்வைச் சேர்க்க வேண்டும்.

இல்லை என்றால் நாம் நஞ்சுக்குள் சிக்கி அதனின் தன்மை நமக்குள் கூடி கோள்களைப் போன்று இருள் சூழும் நிலையே வரும்.

கோள்களின் சுழற்சி வேகம் கூடும் பொழுதுதான் வரும் நஞ்சினை அது பிரித்துவிட்டு ஒளியின் சிகரமாக மாறுகின்றது.

நஞ்சால் இயக்கப்படும் உணர்வுகள் ஆக நஞ்சின் சுழற்சியின் வேகம் கூட அந்த வெப்பத்தின் தன்மை கொண்டு நஞ்சினைப் பிரித்து உலகைச் சிருஷ்டிக்கின்றது.

இது இயற்கையின் நியதி.

இதைப் போல நம்மை அறியாது உட் புகுந்த நஞ்சினை நீக்க அந்த மகரிஷிகளின் உணர்வின் தன்மையை நமக்குள் சேர்க்க வேண்டும். அந்த அகஸ்தியன் சென்ற பாதையில் ஒலி ஒளி என்ற நிலையில் அழியா ஒளியின் சரீரம் நாம் எல்லோரும் பெறவேண்டும்.

இந்தத் தென்னாட்டில் தோன்றிய அகஸ்தியனின் ஆற்றலை எந்நாட்டவரையும் பெறச் செய்வோம்.

https://omeswara.blogspot.in/search/label/தாய்%20தந்தையரே%20முதல்%20தெய்வங்கள்